விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 107 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 22 வியாழக்கிழமை (04.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# முருகன், பயஸ், ஜெயக்குமார் தாயகம் வந்தடைந்தனர்







## குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் கடும் விசாரணைக்குப் பின் விடுவிப்பு

(கொழும்பு) தாயகம் வந்தடைந்த முருகன், பயஸ், ஜெயக்குமாரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பல மணி நேரம் விசாரணை மேற்கொண்ட பின்னர் அவர்களை விடுதலை செய்தனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)



### அரசின் வேலைத்திட்டம் தடைப்பட்டால்

# நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்படும்

## அமைச்சர் பந்துல எச்சரிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத்திட்டத்தில் கடுகளவு மாற்றம் செய்யப்பட்டாலும் நாடு மீண்டும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாணத்தில் வெப்பம் உச்சம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் வெப்ப நிலை உச்சநிலையில் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் வெப்பநிலை உயர்வாக காணப்படுகின்ற நிலையில் வடக்கில் வெப்பநிலை பொது மக்களை வாட்டும் அளவுக்கு காணப்படுகின்றது.

15

### புத்தாண்டை முன்னிட்டு

## இரு வாரங்களுக்கு சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு வாரங்களுக்கும் மேலாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மீண்டும் ஏப்ரல் 24 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் இந்த வாரம் இரண்டு

15

### ஜனாதிபதி, பொதுத் தேர்தலை

## ஒரே நாளில் நடத்துவது தொடர்பில் ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை ஒரே நாளில் நடத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தமக்கு தகவல் அறிய கிடைத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில நேற்று புதன்கிழமை இடம்

15

## இரண்டு முதலீட்டு வலயங்களுக்கு புலிகளின் அச்சுறுத்தல் காணப்பட்டது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட இரண்டு முதலீட்டு வலயங்களுக்கு கடந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஜே.வி.பியினரால் அச்சுறுத்தல் காணப்பட்டிருந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்

15

## ஜே.வி.பி தலைவருடன் விவாதத்துக்கு தயார்

### சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஜே.வி.பி தலைவர் அநுரவுடன் பகிரங்க விவாதத்

15

### ஜே.வி.பி தலைவர்

## அநுர இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸாநாயக்க இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருக்கும்

02

### வடக்கின் இலவச வீட்டுத் திட்டம் தொடர்பில்

## பயனாளர்களைச் சந்தித்து தெளிவுபடுத்துவது அவசியம்

### வட மாகாண ஆளுநர்




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள இலவச வீட்டுத்திட்டம் தொடர்பில் பயனாளர்களை

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்திய துணைத்தூதுவர் வடக்கு பிரதம செயலாளர் இளங்கோவனுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் அவர்களுக்கும், இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று மாலை யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இந்திய தூதரக அலுவலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில் வட மாகாணத்தில் இளைஞர்கள் மற்றும் ஸ்டார்ட்அப் சுற்றுச் சூழலை மையமாகக் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகள், திறன் மேம்பாடு மற்றும் சமூக ஈடுபாடு பற்றியும் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் கல்விக்காக மேற்கொள்ளும் திட்டங்கள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதில் இந்திய துணைத் தூதுவர் தலைமை அதிகாரி பாஸ்கர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ம-7,10)

# விபரீத முடிவெடுத்த ஓய்வு நிலை அதிபர் மரணம்

## சுன்னாகத்தில் சம்பவம்

சுன்னாகத்தில் விபரீத முடிவெடுத்து ஓய்வு நிலை அதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது சுன்னாகம் தெற்கு கதிரமலை வீதியில் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதில் இளவாலை மெய்கண்டான் பாடசாலையின் முன்னாள் அதிபரான அம்பலவாணர் ரங்கநாதன் (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் தனித்து வாழ்ந்து வந்த நிலையிலேயே இவ்வாறு விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## பயனாளர்களை...

நேரில் சந்தித்து தெளிவுபடுத்துவது அவசியமானதொன்று என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இலவச வீட்டுத்திட்டத்தை முன்னெடுக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போதே ஆளுநர் இதனை தெரிவித்தார்.

சூரிய படலங்கள் பொருத்தப்பட்ட கூரைகளுடன் நிர்மாணிக்க திட்டமிடப்பட்ட இந்த வீட்டுத் திட்டமானது தற்போது சற்று மாற்றப்பட்டு, கூரைகளில் சூரிய படலங்கள் அற்ற வகையில் வீடுகளை நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீடுகளின் கூரைகளில் பொருத்தப்படவிருந்த சூரிய படலங்களை ஒன்று சேர்த்து, அரச காணிகளில் சூரிய படல பூங்காக்களை நிர்மாணிக்கும் வகையில் திட்டம் மாற்றப்பட்டுள்ளது. எனினும், தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளர்களுக்கான இலவச வீடுகள் நிர்மாணித்து வழங்கப்படும் என திட்டத்தை முன்னெடுத்துள்ள நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, இதுவரை 31 ஆயிரத்து 730 பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான வீட்டுத்திட்டத்தை வெகு விரைவில் பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி தமது நிறுவனத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் நேற்றைய கூட்டத்தின் போது குறித்த நிறுவனப் பிரதானிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் இறுதியாக நடைபெற்ற யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, நெடுந்தீவு மக்களையும் புதிய வீட்டுத்திட்டத்திற்குள் உள்வாங்குமாறு ஆளுநர் குறித்த நிறுவனத்திடம் கோரினார். அவர்களுக்கான சூரிய படலங்களை பொருத்துவதற்கு தேவையான காணிகளை ஒதுக்கி தருவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

இந்த வீடமைப்பு திட்டத்துடன் இணைந்ததாக பூநகரி குளத்திற்கு அருகில் சூரிய படல பூங்காக்களை நிர்மாணிப்பதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான சுற்றாடல் தொடர்பான கள ஆய்வு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக சூரிய படல திட்டத்தை முன்னெடுக்கும் நிறுவனம் கூறியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த பாரிய செயற்றிட்டம் தொடர்பில் பயன்பெறவுள்ள அனைத்து தரப்பினர்களுக்கும் கிராம மட்டத்தில் சந்திப்புக்களை ஏற்படுத்தி தெளிவுப்படுத்த வேண்டும் என ஆளுநர் கூறினார்.

இதனூடாக புதிய வீடமைப்புத் திட்டம் தொடர்பில் மக்களிடம் காணப்படும் சந்தேகங்களை குறித்த நிறுவனம் தீர்க்க வேண்டும் என கூறிய ஆளுநர், மக்கள் சந்திப்புக்கு தேவையான முழு ஒத்துழைப்புகளையும் வழங்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவனுக்கு பணிப்புரை விடுத்தார். (ம-7,10)

## நாட்டில்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் சவாலான பணியை ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதன் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெறுவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது. பின்னர் கடன் மறுசீரமைப்பு குறித்தும் ஆராயப்பட்டது. அதனால் தற்போது நாடு சுமூகமான பொருளாதார நிலையை அடைந்துள்ளது. இந்த நிலையை விருப்பமின்றியேனும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அந்த நேரத்தில் டொலரின் பெறுமதி 400 ரூபாவிற்கு கிட்டியதாக காணப்பட்டது. ஆனால் இன்றளவில் டொலரின் பெறுமதி 300 ரூபாவை விடவும் குறைந்துள்ளது. அதனால் இறக்குமதிப் பொருட்களுக்கான கொடுப்பனவுகளும் குறைவடைந்திருக்கிறது.

மேலும், பூஜ்ஜியமாகக் குறைந்து போயிருந்த நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு இன்று 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. நிலுவைத் தொகையின் நடப்புக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது. அதன்படி, ரூபாயின் பெறுமதி அதிகரித்திருக்கிறது. பல பொருட்களின் விலை குறைந்துள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக அரச வரவு செலவுத் திட்டத்தின் முதன்மைக் கணக்கில் உபரி ஏற்பட்டுள்ளது.

மேலும், வட்டி விகிதம் குறைந்துள்ளது. 70% ஆக இருந்த பணவீக்கம் 6% ஆக குறைந்துள்ளது. அதனால் பொருட்களின் விலை உயர்வு விகிதமும் குறைந்துள்ளது. அதனால் நாடு பாதகமான நிலையிலிருந்து மீண்டுள்ளது என்றே கூறவேண்டும்.

தற்போதைய புதிய மத்திய வங்கிச் சட்டத்தின்படி, எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், பணம் அச்சிடுவது தடை செய்யப்பட்டுள்ளது. இதன் ஊடாக நிதி நிர்வாகத்தில் ஒழுக்கத்தைப் பேண முடிந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தற்போதைய வேலைத்திட்டத்தில் கடுகளவு மாற்றம் செய்யப்பட்டாலும் நாடு மீண்டும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படும். அத்தோடு நாட்டின் எதிர்காலமும் கேள்விக்குறியாகிவிடும் என்றார். (ம-7,10)

## அநுர...

தேசிய மக்கள் சக்தியின் ஆசிரியர்களின் அபிமானமிகு வடமாகாண மாநாடு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட வங்கி மற்றும் நிதி அமைப்பின் மாநாடு ஆகிய இரு நிகழ்வுகளில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க பங்கேற்கவுள்ளார்.

குறித்த மாநாடானது, இன்று இடம் பெறவுள்ளது. அதன் முதல் நிகழ்வாக ஆசிரியர்களின் அபிமானமிகு வடமாகாண மாநாடு பிற்பகல் 1.30மணிக்கு இடம் பெறவுள்ளது.

இழக்கப்படுகின்ற கல்வி உரிமைகளை வென்றெடுப்போம்! ஆசிரியர் - மாணவர்களின் உரிமைகளை வென்றெடுப்பது எப்படி?" எனும் கருப்பொருளில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த மாநாட்டில் அச்சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க மற்றும் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்

அதனையடுத்து யாழ்ப்பாண மாவட்ட வங்கி மற்றும் நிதி அமைப்பின் மாநாடு பிற் பகல் 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-7,10)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 . 06 . 1983

உதிர்வு 04 . 04 . 2019



அமரர்
பாலேந்திரநாதன் சுபேஸ்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உன் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீ
விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையவில்லை
உன் நினைவுகள்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


கிளான்,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.
குடும்பத்தினர்
(0010)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union WU MoneyGram. Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

நாகபூஷணி திருமண சேவை
இடம் மாற்றம்
திறந்திருக்கும் நேரம் : (7.30 AM - 5.30 Pm)
10/2, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்ப்பாணம் வேம்படிச் சந்திக்கு அருகில்)
நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.
077 138 7596, 071 999 9306
(352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெசாக் தினத்தை முன்னிட்டு இறைச்சி, மதுபான கடைகளுக்கு பூட்டு



(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மே 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையான மூன்று நாட்களுக்கு மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெசாக் தினத்தை முன்னிட்டு அனைத்து மதுபானசாலைகளையும் மூடுவதற்கு புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அத்துடன், விலங்குகள் வெட்டப்படும் இடங்கள், இறைச்சி மற்றும் இறைச்சியை கசாப்பு செய்யும் இடங்களும் மூடப்படவுள்ளன. (நி-5)

# தேர்தல் நடவடிக்கைகளால் மறுசீரமைப்பு தடைப்படலாம்

### உலக வங்கி அச்சம்

(கொழும்பு)

**இலங்கையில் இவ் வருடம் தேர்தல்கள் நடைபெறவிருக்கும் நிலையில், அதன்விளைவாக தற்போது முன்னெடுக்கப் பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தடைப் படக்கூடுமோ என்று தாம் கரிசனை கொண்டிருப்பதாக உலக வங்கியின் இலங்கைக்கான சிரேஷ்ட பொருளியலாளர் ரிச்சர்ட் வோல்கர் தெரிவித்துள்ளார்.**

உலக வங்கியின் 2024 ஆம் ஆண்டுக்கான தெற்காசியப்பிராந்திய அபிவிருத்தி நிலவரம் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நிலவரம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை நேற்று முன்தினம் செவ்வாய் கிழமை உலக வங்கியின் இலங்கைக் கிளை அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

அதனை முன்னிட்டு இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் ஒருங்கிணைப்பில் உலக வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ரிச்சர்ட் வோல்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார மீட்சியை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை எனினும், அவற்றின் விளைவாக மக்கள் மீது ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் குறித்து தாம் மிகுந்த கரிசனையடைந்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இருப்பினும் தற்போதைய சூழ் நிலையில் மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவை என வலியுறுத்தினார்.

அதேவேளை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கொள்கை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு உலக வங்கி முழுமையான ஒத்துழைப்பை வழங்கிவருவதாகவும், "அஸ்வெசும" செயற்றிட்டம் மற்றும் நிதியியல் பாதுகாப்பு செயற்றிட்டம் ஆகியவற்றுக்கு உலக வங்கி நிதியுதவி அளித்திருப்பதாகவும் ரிச்சர்ட் வோல்கர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இவ்வருடம் இலங்கையில் முக்கிய தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், அதன் விளைவாக பொருளாதார மீட்சியை முன்னிறுத்தி தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தடைப்படக்கூடுமோ என தாம் கரிசனை கொண்டிருப்பதாகத் தெரிவித்த அவர், பொருளாதார மீட்சிக்கும் நாட்டின் சுபீட்சத்துக்கும் மறுசீரமைப்புக்கள் இன்றியமையாதவை என வலியுறுத்தினார். (நி-5-6)

## குடும்ப வன்முறைகளைத் தீர்ப்பதற்கான புதிய சட்டம்

(கொழும்பு)

தற்போதைய குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து புதிய சட்டமூலமொன்றை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

அதேநேரம், வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் தேசிய மகளிர் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வாய்ப்பு கிட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

கம்பஹா, இரத்தினபுரி, கொழும்பு, மாத்தறை, மட்டக்களப்பு, அநுராதபுரம், மொனராகலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பெண்களுக்கான 11 தற்காலிக தடுப்பு நிலையங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பாலின சமத்துவ சட்டமூலத்திற்கும் அமைச்சரவை அனுமதி அளித்திருப்பதோடு, வர்த்தமானியில் அறிவிப்பதற்காக அரச அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5)

### யாழ். சர்வதேச விமான நிலையம்

## குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன




(கொழும்பு)

யாழ். சர்வதேச விமான நிலையத்தை குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த தகவலை துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை தனியார் துறையினருக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விருப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கு பொருத்தமான முதலீட்டாளரைத் தெரிவு செய்ததன் பின்னர் மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மத்தளை விமான நிலையத்தின் செயற்பாடுகளை இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கான யோசனை, நிதி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

## 500 பேரை ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைக்க தீர்மானம்

(கொழும்பு)

உயர் தொழில்நுட்ப கல்வி டிப்ளோமாவை பூர்த்தி செய்த 500 பேரை ஆங்கில ஆசிரியர்களாக சேவையில் இணைத்துக்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்பு முன்னெடுக்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ள தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். (நி-5)

## தேயிலை விளைச்சலில் வீழ்ச்சி

(கொழும்பு)

தற்போது நிலவும் வறட்சி காரணமாக தேயிலை விளைச்சல் 30 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வறட்சியினால் தேயிலை தோட்டங்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் தேசிய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் லால் பிரேமநாத் குறிப்பிட்டார்.

அத்துடன் தேயிலை உற்பத்தி பாரிய அளவில் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தரமான தேயிலை உற்பத்திகளை பெற்றுக் கொள்வதில் இந்நாட்களில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நரைன் ராட்சச 'ஆட்டம்' கொல்கத்தா 'கொண்டாட்டம்'

## சரிந்தது டில்லி கப்பிட்டல்ஸ்



டில்லி அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் கொல்கத்தா அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் மிரட்டிய சுனில் நரைன் 85 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17வது சீசன் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன.

நேற்று நடந்த லீக் போட்டியில் கொல்கத்தா - டில்லி அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

**நரைன் அரைச்சதம்**

கொல்கத்தா அணிக்கு பில் சால்ட் (18), சுனில் நரைன் ஜோடி ஆரம்பம் வழங்கியது. போட்டியின் 4ஆவது ஓவரை வீசினார் இஷாந்த். இதன் முதல் இரு பந்தில் சிக்சர் அடித்த நரைன், அடுத்த 4 பந்தில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி விளாச, மொத்தம் 26 ஓட்டங்கள் கிடைத்தன. இவர் 22ஆவது பந்தில் அரைச்சதம் கடந்தார்.

**ரகுவன்ஷி கலக்கல்**

நரைனுக்கு நல்ல "கம்பெனி" கொடுத்தார் ரகுவன்ஷி. சுமித் குமார் வீசிய 9ஆவது ஓவரின் கடைசி இரு பந்தில் இவர், சிக்சர், பவுண்டரி அடித்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 104 ஓட்டங்கள் சேர்த்தபோது நரைன் (85), மிட்சல் மார்ஷ் பந்தில் வீழ்ந்தார். ஐ.பி.எல்., தொடரில் முதல் அரைச்சதம் கடந்த ரகுவன்ஷி (54), நார்ட்ஜே "வேகத்தில்" சரிந்தார்.

பின் அணித் தலைவர் ஸ்ரேயாஸ்-ஆன்ட்ரி ரசல் இணைந்தனர். கொல்கத்தா அணி 15.2 ஓவர்களில் 202 ஓட்டங்களை எட்டியது. ஸ்ரேயாஸ் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். நார்ட்ஜே வீசிய 19வது ஓவரில் 3 சிக்சர், 1 பவுண்டரி அடித்த ரிங்கு சிங் 26 ஓட்டங்கள் (8 பந்து) எடுத்தார். ரசல் 41 ஓட்டங்களில் வெளியேறினார்.

20 ஓவர்களில் கொல்கத்தா அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைக் குவித்தது.

**ரிஷாப் ஆறுதல்**

டில்லி அணிக்கு வோர்னர், பிரித்வி ஷா (10) ஜோடி சுமாரான ஆரம்பம் வழங்கியது. வேகத்தில் மிரட்டிய ஸ்ரார்க், மிட்சல் மார்ஷை "டக்" அவுட்டாக்கினார். ரூ. 24.75 கோடிக்கு வாங்கப்பட்ட ஸ்டார்க், வீழ்த்திய முதல் விக்கெட்டாக (3 போட்டி) இது அமைந்தது. மீண்டும் அசத்திய ஸ்ரார்க், வோர்னரை (18) வெளியேற்றினார்.

அணித் தலைவர் ரிஷாப் பன்ட், திரிஸ்டியன் ஸ்டப்ஸ் இணைந்து போராடினர். வெங்கடேஷ் வீசிய 12வது ஓவரில் 4 பவுண்டரி, 2 சிக்சர் என 28 ஓட்., விளாசிய ரிஷாப், அரைசதம் கடந்தார். டில்லி அணிக்காக இவர் அடித்த 18ஆவது அரைச்சதம் இது. ரிஷாப், 25 பந்துகளில் 55 ஓட்டங்கள் எடுத்து வருண் சக்ரவர்த்தி பந்தில் வீழ்ந்தார். அக்சர் படேல் (0) ஒரே பந்தில் வெளியேறினார். ஸ்டப்ஸ் 54 ஓட்,, எடுத்தார்.

டில்லி அணி 17.2 ஓவரில் 166 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் கொல்கத்தா சார்பில் வைபவ் 3, வருண் சக்கரவர்த்தி 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர். (ம-7,10)

### 272

டில்லிக்கு எதிராக 272 ஓட்டங்கள் எடுத்த கொல்கத்தா அணி ஐ.பி.எல்., வரலாற்றில் ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் குவித்த அணிகள் வரிசையில் இரண்டாவது இடம் பிடித்தது. முன்னதாக மும்பைக்கு எதிராக 277/3 ஓட்டங்கள் எடுத்த ஹைதராபாத் அணி முதலிடத்தில் உள்ளது.

* ஒட்டுமொத்த "ரி20" அரங்கில் ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் குவித்த அணிகளுக்கான பட்டியலில் கொல்கத்தா 5ஆவது இடம் பிடித்தது. முதலிடத்தில் நேபாளம் (314/3, எதிர்: மங்கோலியா, 2023) உள்ளது.




# கிண்ணம் வென்றது இலங்கை




பங்களாதேஷுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் அசத்திய இலங்கை அணி 192 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி கிண்ணம் வென்றது.

பங்களாதேஷ் சென்ற இலங்கை அணி அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

சியல்கெட்டில் நடந்த முதல் டெஸ்டில் இலங்கை அணி 328 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது.

இந் நிலையில் தொடரின் 2ஆவதும் இறுதியுமான டெஸ்ட் சாட்டோகிராமில் நடந்தது.

முதல் இன்னிங்சில் இலங்கை 531, பங்களாதேஷ் 178 ஓட்டங்கள் எடுத்தன.

இலங்கை அணி 2ஆவது இன்னிங்ஸில் 157/7 "டிக்ளேர்" செய்தது. பின் 511 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 4ஆம் நாள் முடிவில் 268/7 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மெஹிடி ஹசன் (44), தைஜுல் இஸ்லாம் (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியின் மெஹிடி ஹசன் மிராஸ் அரைச்சதம் கடந்தார். தைஜுல் (14) ஏமாற்றினார். லகிரு குமார பந்தில் ஹசன் மஹ்மூத் (6), கலீத் அகமட் (2) ஆட்டமிழந்தனர்.

**12 முறை மோதல்**

பங்களாதேஷ் மண்ணில் விளையாடிய டெஸ்டில் தோல்வியை சந்தித்ததில்லை என்ற இலங்கையின் வெற்றி நடை தொடர்கிறது.

இதுவரை இங்கு விளையாடிய 12 டெஸ்டில், 9இல் இலங்கை வென்றது. மூன்று டெஸ்ட் சமனிலையானது.

பங்களாதேஷ் அணி 2வது இன்னிங்ஸில் 318 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது. மெஹிடி ஹசன் (81) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் லகிரு குமார 4, கமிந்து மெண்டிஸ் 3, பிரபாத் ஜெயசூர்ய 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

ஆட்ட நாயகன் (92* ஓட்., 3 விக்கெட்டுக்கள்), தொடர் நாயகன் (367 ஓட்., 3 விக்கெட்டுக்கள்) விருதுகளை இலங்கையின் கமிந்து மெண்டிஸ் கைப்பற்றினார். (ம-7,10)

# கொக்குவில் இந்துவின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டியானது நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல் லூரி முதல்வர் பெ.வசந்தன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்க செயலாளருமான இ.தமிழாகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/பாஷையூர் புனித அந்தோனியார் றோ.க பெண்கள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் ஏ.ஜோன்கொலின் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இலங்கை வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் எஸ்தாக்கி சந்தனூ, சிறப்பு விருந்தினராக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி எம். ஜெறோ செல்வநாயகம், கௌரவ விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவி திருமதி. றெஜி கிறிஸ்ரில்டா சௌந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(நி-5-6)

---

# கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்
## சபை நிதி - 2024 கட்டம் II

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்கள்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/CF-II/2024/01 | பிரம்படி வீதியை காப்பெற் வீதியாக புனரமைத்தல். | 6.74 | 87 நாட்கள் | C7 & C6 வீதி | 77 நாட்கள் | 102,000.00 | 2024.07.31 |
| 2. | NPS/CF-II/2024/02 | கருவப்புலம் வீதி - கலட்டி முந்தல் வீதி காப்பெற் வீதியாக புனரமைத்தல். | 13.27 | 87 நாட்கள் | C6 & C5 வீதி | 77 நாட்கள் | 200,000.00 | 2024.07.31 |
| 3. | NPS/CF-II/2024/03 | பாரதிபுரம் பிரதான வீதி காப்பெற் வீதியாக புனரமைத்தல். | 5.87 | 87 நாட்கள் | C7& C6 வீதி | 77 நாட்கள் | 90,000.00 | 2024.07.31 |
| 4. | NPS/CF-II/2024/04 | காரைமுனங்கு இயற்கை பசளை நிலையத்திற்கு மதில் அமைத்தல். | 12.88 | 87 நாட்கள் | C6 & C5 கட்டடம் | 77 நாட்கள் | 195,000.00 | 2024.07.31 |
| 5. | NPS/CF-II/2024/05 | காரைமுனங்கு இயற்கை பசளை நிலைய உள்ளக வீதி அமைத்தல். | 1.31 | 60 நாட்கள் | C9 & C8 வீதி | 49 நாட்கள் | 20,000.00 | 2024.07.03 |

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது. (SBD -03)

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப் புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல் களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2024.04.05 ஆம் திகதியிலிருந்து 2024.04.18 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரை** யும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 3,000.00 (வரி நீங்கலாக) உம்வேலை இலக்கம் 2,4 இற்கு ரூபா.6,000.00 (வரி நீங்கலாக) உம் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம்,பிரதி) பூரணப்படுத்தி **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை,** 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2024.04.19 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை** என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் **2024.04.15** ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் **மு. ப. 10.00** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**

(சி-0059)

---

# இராசிபலன்

04.04.2024
பங்குனி 22, வியாழக்கிழமை
தசமி பிற்பகல் 12.12 மணிவரை

திருவோணம் பிற்பகல் 4.29 மணிவரை
சுபநேரம் 7.39-9.09 மணிவரை
இராகுகாலம் 1.39-3.09 மணிவரை

சந்திராஷ்டமம்: மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்




பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களைச் சந்தித்து வளம் காணும் நாள்.




கவலைகள் தீர இஷ்டதெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கூடிய அக்கறை தேவை.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு இடம்பெறலாம்.




பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் மேலோங்கும், கௌரவமான நாள்.




மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரிய மொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.




செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, பயணங்கள் கைகூடும்.




பொது வாழ்வில் புகழ் கூடும், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.




பொது நலனில் அக்கறை கூடும், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய காரியம் முடிவில் ஆதாயம் தரும், பயணங்களால் பலனுண்டு.




சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச்செய்வீர்கள், பயணத்தால் பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.




அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

அளவோடு இருந்தால் எதற்கும் அளவிடப்படத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக் கழகத்தில் சர்வதேச கல்வியியல் மாநாடு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு, யாழ்.பல்கலைக் கழக பட்டப்பின்படிப்புகள் பீடமும், கலைப்பீடத்தின் கல்வியியல் துறையும் இணைந்து முன்னெடுக்கும் முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு - 2024 எதிர்வரும் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் சிவக்கொழுந்து சிறீசற் குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (நி-5-6)

## சதுரங்க சுற்றுப்போட்டி

(சாவகச்சேரி)
சுன்னாகம் பாரம்பரிய றோட்ரிக் கழகமும்-சுன்னாகம் றோட்டறக் கழகமும் இணைந்து நடத்திய சதுரங்க சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான உதவி மாவட்ட ஆளுநர் ரோட்டரியன் ஜோய் பிஜசீலனும், சிறப்பு விருந்தினராக சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகைபாலனும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேற்படி சுற்றுத்தொடரில் 500 இற்கும்மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

# வடக்கில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒஸ்மானியாக் கல்லூரியில் இடம் பெற்றது.

இதன்போது விருந்தினர்களுக்கு குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு பிரதி வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ், மத தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-33)

# மருத்துவமனையிலிருந்து கைதி தப்பியோட்டம்

(குருமன்காடு)
மன்னாரில் 9 வயது சிறுமி துஸ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டவர் வவுனியா மருத்துவமனையில் இருந்து தப்பி ஓடியுள்ளார்.

மன்னார், தலைமன்னார் பகுதியில் 9 வயது சிறுமி துஸ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் 55 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உடல் நலப் பாதிப்பு காரணமாக வவுனியா மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலை குறித்த சந்தேக நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். அவரை தேடும் பணியில் சிறைக்காவலர்களும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். (நி-5-6-250)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)
ஈழத்தின் மூத்த முற்போக்கு எழுத்தாளரான மு.அநாதரட்சகன் எழுதிய சிறுகதைத் தொகுதியான "பின்தொடரும் வலி" நூல் வெளியீடு நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அல்வாய், மெதடிஸ்த தேவாலயத்தின் ஆழ்வாப்பிள்ளை மண்டபத்தில் ஜீவநதி, கடல் மற்றும் நாங்கள் சஞ்சிகைகளின் ஆசிரியர் க.பரணீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# ரமழான் மாதத்தை முன்னிட்டு நோன்புப் பொதிகள் வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)
சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்கான நிலையத்தினால் புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பள்ளிக் குடியிருப்பில் வசிக்கும் 24 இஸ்லாமியக் குடும்பங்களுக்கு அண்மையில் நோன்புப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்ட நோன்புப் பொதி வழங்கும் நிகழ்வில் சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் மற்றும் நிலையத்தின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-30)

# அக்கராயனில் 3,687 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்ள தீர்மானம்

(அக்கராயன்)
கிளிநொச்சி அக்கராயன் குளத்தின் கீழ் 3,687 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற் கொள்ளப்பட உள்ளதாக நேற்று முன்தினம் 02.04.2024 ஸ்கந்தபுரத்தில் கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் குளத்தில் இருந்து ஏற்கனவே ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத்திற்கும் கண் ணகைபுரம் மேட்டுப் பயிர்ச் செய்கைக்கும் குளத்தில் இருந்து நீர் விநியோகிக் கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-350)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு அபிஷேகம்,மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதிவலம் வரும் காட்சி இடம்பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

# யாழ்.மத்திய கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி நாளை


(யாழ்ப்பாணம்)
யாழ்.மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 01.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ். இந்திரகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 120 | 80-130 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 170 | 140 | 180 |
| பச்சைமிளகாய் | 180 | 150 | 180 | 180-230 | 200 |
| தக்காளி | 80 | 80 | 120 | 80-100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 100-120 | 200 |
| கோவா | 200 | 200 | 230 | 200 | 220 |
| கரட் | 300 | 400 | 300 | 280 | 400 |
| பூசணி | 200 | 120 | 140 | 90-120 | 160 |
| புடோல் | 120 | 150 | 120 | 110 | 100 |
| வாழைக்காய் | 180 | 120 | 130 | 80-120 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 300-400 | 200-280 | 250 |
| பெரிய வெங்காயம் | 550 | 550 | 550 | 350 | 350 |
| பாகற்காய் | 350 | 200 | 250 | 200-250 | 250 |
| வெண்டக்காய் | 150 | 150 | 140 | 80-150 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- | 150 |
| பயற்றங்காய் | 250 | 300 | 180 | 100-150 | 200 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 200 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 200 | 200 |
| கறிமிளகாய் | 250 | 180 | 300 | 200-250 | 250 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 400-650 | 800 |
| போஞ்சி | 300 | 200 | 250 | 180 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | -- | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 100 | 50-70 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 200-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 120 | 80 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 450 | 450 | -- | 400 |
| வெங்காயப்பூ | -- | 200 | -- | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 120 | 80 | 50 |
| [illegible] | [illegible] | 40 | 150 | 70 | 80 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 80 | -- |

# சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் நால்வர் கைது; வாகனங்கள் தடுத்து வைப்பு



(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குள் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட மற்றும் உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி மணல் ஏற்றிச் சென்ற [illegible] பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருப்பதுடன் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறவன்புலோ-கோவிலாக்கண்டிப் பகுதியில் நேற்று புதன்கிழமை அதி காலை வேளையில் சட்டவிரோ தமாக மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உழவியந்திரம் ஒன்றையும் அதன் சாரதியையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை உரிய அனுமதிப் பத்திரம் இன்றியும் அனுமதிப் பத்திரத்தில் மோசடி மேற் கொண்டும் மணல் கடத்தலில் ஈடுபட்ட மூன்று டிப்பர் வாகனங்கள் மற்றும் அதன் சாரதிகளையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை [illegible] முன்னெடுத்து [illegible] னர். (நி-5-30-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நீதிமன்றில் வாக்குமூலம் வழங்க தயாரில்லை

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்க வேண்டிய அவசியமில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி தனது சட்டத்தரணிகள் ஊடாக மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் பிரேரணை ஒன்றை தாக்கல் செய்து இதனை அறிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தாம் ஏற்கெனவே குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வழங்கிய கருத்து தொடர்பில் நீண்ட வாக்குமூலம் ஒன்றை வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டியே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# பல அரசியல் கட்சிகள் மாயையில் வாழ்கின்றன

## ரணில் தரப்பு ஆதங்கம்



(கொழும்பு)

இலங்கையில் 60 வீதத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படாத நிலையில் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உதவித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

சில அரசியல் கட்சிகள் அதிக வாக்குகளைப் பெறும் என எதிர்பார்க்கப்படும் வதந்திகள் பொய்யானவை, அந்த அரசியல் கட்சிகள் மாயையில் வாழ்கின்றன. அதேவேளை, 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டில் ஏற் பட்ட ஆச்சரியத்தை போன்ற தொரு ஆச்சரியத்தை தற் போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்துவார்.

திரைக்கு பின்னால் பல விடயங்கள் நடக்கின்றன. எனவே வெளியில் இருந்து பார்த்து முடிவுகளுக்கு வர வேண்டாம்.

பல தனிநபர்களும் கட்சிகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தங்கள் ஆதரவை உறுதியளித்துள்ளனர். மேலும் தேர்தல் நெருங்கும்போது அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கெஹெலியவின் மனு நீதிமன்றால் நிராகரிப்பு



(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனக்கு பிணை வழங்குமாறு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல விடுத்த கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை நிராகரித்துள்ளது.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, கெஹலிய ரம்புக்வெல்ல தனக்கு பிணை வழங்குவதற்கு விசேட காரணங்கள் எதனையும் முன்வைக்கவில்லை என தெரிவித்தார். (நி-5-6)

## ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு



கொழும்பு தமிழ்ச் சங்கம் விநோதன் அரங்கில், கொழும்பு கலை, இலக்கிய, ஊடக நண்பர்கள் வட்டம் நடத்திய ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு எனும் நூலின் அறிமுக விழாவில் கனடா தமிழ் கல்லூரி தலைவரும் சத்தியப் பிரமாண ஆணையாளருமான சமூக சிற்பி வி.எஸ்.துரைராஜா அவர்களுக்கு கலாபூஷணம் யாழ்.பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

அருகில் சிறப்பு அதிதி தினகரன்,தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், புரவலர் ஹாஷிம் உமர், ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர், மருத்துவர் சாகித்ய ரத்னா ஞானசேகரன், சிறப்பு அதிதி முனைவர் சிவலிங்கம் சதீஷ்குமார் ஆகியோரையும் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அவர்களையும் காணலாம். (சி-0058)

## லஹிரு, துமிந்த, ஜினரதன தேரர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

லஹிரு வீரசேகர, துமிந்த நாகமுவ மற்றும் ரத்கரவ்வே ஜினரதன தேரர் ஆகியோரை பிணையில் விடுதலை செய்வதற்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி மக்கள் போராட்ட இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது குறித்த மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதன்படி, அன்றிலிருந்து இன்றுவரை குறித்த மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், பிணையில் செல்ல விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


## மணிவிழா வாழ்த்து

14.03.2014 தொடக்கம் எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 04.04.2024 இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறும் சிரேஸ்ட ஆசிரியரும் பகுதித் தலைவருமாகிய

திரு. திருநாவுக்கரசு சிவயோகலிங்கம்

B.Sc, Dip in Edu. (SLTS-I)

அவர்களது ஓய்வுக்காலம் சிறக்கவும் இனிவரும் காலங்கள் என்றும் இனிதாக நலம் சூழ புகழோங்க வாழ உளமார வாழ்த்துகிறோம்



சேவை விபரம்

- யா/யாழ்.இந்துக்கல்லூரி 11.01.1993-31.08.1997
- யா/விக்ரோறியாக் கல்லூரி 01.09.1997-13.03.2012
- மு/மல்லாவி மத்திய கல்லூரி 14.03.2012-13.03.2024
- யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை 14.03.2014-03.04.2024 வரை

(339)

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

## கல்யாண மாலை



இடமாற்ற அறிவித்தல்

அன்பான வாடிக்கையாளர்களுக்கு

இலக்கம் 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிய கல்யாண மாலை அலுவலகம் 04.04.2024 இன்று வியாழக்கிழமை முதல் (தற்காலிகமாக) இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (பழைய வலம்புரி அலுவலகம்) எனும் முகவரியில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.



மேலதிக தொடர்புகளுக்கு :
021 720 1005
076 097 3120


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கண்ணிவெடி வெடித்ததில் 9 சிறுவர்கள் உயிரிழப்பு

### ஆப்கானில் சோகம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பழைய கண்ணிவெடியை எடுத்து விளையாடிக் கொண்டிருந்த 9 சிறுவர்கள் அது வெடித்துச் சிதறியதில் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் கஜினி மாகாணம், கெரோ மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்டிருந்த கண்ணிவெடியைக் கொண்டு சிறுவர்கள் விளையாடிய போது அது திடீரென வெடித்துச் சிதறியதிலேயே சிறுவர்கள் உயி ரிழந்துள்ளனர் என கஜினி மாகாணத்துக்கான தலிபான்களின் தகவல் மற்றும் கலாசாரப் பிரிவு இயக்குநர் ஹமீதுல்லா நிஸார் தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக ஆப்கானிஸ்தான் போரினால் பாதிக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக போர் நடைபெற்று வந்த ஆப்கானிஸ்தானில் பழைய கண்ணிவெடிகள், வெடி குண்டுகள் போன்றவற்றால் சிறுவர்கள் அவ்வப்போது உயிரிழந்து வருகின்றனர்.

குடும்ப வருவாய்க்காக பழைய பொருட்களை சேகரிக்கும் குழந்தைகள் இதுபோன்ற விபத்துகளில் சிக்கி உயிரிழந்து விடுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# 25 ஆண்டுகளுக்கு

# உலுக்கிய சக்திவா

- சுனாமி எச்சரிக்கை விடுப்பு
- எழுவர் பலி, 736 பேர் படுகாயம்,
- கட்டடங்கள் வீழ்ந்து நாசம்

(தாய்பெய்)

**தாய்வானின் கிழக்கு கடற்கரையில் நேற்று 7.5 ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என அமெ ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதனையடு மற்றும் ஜப்பானுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்க**



கடந்த 25 ஆண்டுகளில் தாய்வான் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள தீவுப்பகுதிகளில் தாக்கப்பட்ட மிக வலுவான நிலநடுக்கமாக இது பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், தாய்வானின் ஹுவாலியன் நகரில் பல கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன.

இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளதோடு 736 பேர் படுகாயமடைந்துள்ளனர்.


## 33 ஆண்டுகால அரசியல் பயணம் ஓய்வு பெற்றார் மன்மோகன்சிங்

(டில்லி)

கடந்த 33 ஆண்டு காலமாக இந்திய அரசியலில் பயணம் செய்த முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் நேற்றுடன் ஓய்வு பெறவுள்ளதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

கடந்த 1991 முதல் 2019 ஆம் ஆண்டு வரை அசாம் மாநிலத்தில் இருந்தும், 2019 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்தும் மன்மோகன் சிங் மாநிலங்களவைக்கு சென்றார்.

இந்த நிலையில் அவரது பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது.



மன்மோகன் சிங் ஓய்வை தொடர்ந்து மாநிலங்களவையில் வெற்றிடமாகவுள்ள ராஜஸ்தான் மாநிலத்துக்கான உறுப்பினராக காங்கிரஸ் கட்சியின் சோனியா காந்தி பதவியேற்கிறார்.

அந்த வகையில், சோனியா காந்தி முதல் முறையாக மாநிலங்களவை உறுப்பினராக பாராளுமன்றம் செல்லவிருக்கிறார். மன்மோகன் சிங் தவிர 9 மத்திய அமைச்சர்கள் மற்றும் 54 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஓய்வுபெற்றுள்ளனர். (நி-5)

## கொங்கோ குடியரசின் முதல் பெண் பிரதமர் நியமனம்

(பிரசாவில்)

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் முதல் பெண் பிரதமராக ஜூடித் சுமின்வா டுலுகா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற தேர்தலில் அந்நாட்டின் ஜனதிபதியாக 2 ஆவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஃபெலிக்ஸ் ஷிசேகெடி, தேர்தல் பிரசாரத்தின்போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் டுலுகாவை பிரதமராக நியமித்துள்ளார்.

பல்வேறு ஆயுதக் குழுக்கள் சண்டையிட்டு வரும் கொங்கோவில் அமைதியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக இந்த நியமனத்துக்குப் பிறகு சுமின்வா டுலுகா தெரிவித்துள்ளார். (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப்பின் தாய்வானை

# ...ய்ந்த நிலநடுக்கம்

## ...பலர் மாயம்

...5 ரிக்டர் அளவில் ...மரிக்க புவியியல் ...டுத்து தாய்வான் ...கப்பட்டுள்ளது.



ஹுவாலியனில் உள்ள சுரங்கப் பாதையில் பலர் சிக்கியுள்ளதாகவும் தாய்வானின் தேசிய தீயணைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தாய்வான் அருகே சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ள நிலையில், தாய்வான் மற்றும் ஜப்பான் ஆகிய பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள ஒகினாவா தீவை குறிப்பிட்டு சுனாமி எச்சரி க்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் 3 மீற்றர் அளவிற்கு சுனாமி அலை ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் ஜப்பான் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த கடுமையான நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து உடனடியாக தகவல் ஏதும் வெளியாகாத நிலையில், தாய்வானில் கட்டடங்கள் இடிந்து சேதம் அடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் ஜப்பான் நாட்டில் உள்ள தீவுகளையும் தாக்கியுள்ளது. ஜப்பான் நாட்டின் மியாகோ மற்றும் யாயியாமா தீவுகளை முதல் அலை தாக்கியதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், இந்த சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி பலர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஹெலிகொப்டர் வீழ்ந்ததில் மூவர் பலி, 3 பேர் படுகாயம்



(ஜெனீவா)

சுவிஸ் ஆல்ப்ஸ் மலையில் சுற்றுலா ஹெலிகொப்டர் ஒன்று நேற்று விழுந்து நொறுங்கியதில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இந்த விபத்தில் மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


நான்கு சுற்றுலாப் பயணிகள், ஒரு வழிகாட்டி மற்றும் விமானியுடன் பயணித்த ஹெலிகொப்டரே விபத்துக் குள்ளாகியுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லை.

சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மூன்று பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்தனர். (நி-5)

# துருக்கியில் தீ விபத்து 29 பேர் உயிரிழப்பு



(இஸ்தான்புல்)

துருக்கியில் இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்தான்புல்லில் உள்ள உயரமான கட்டடத்தின் அடித்தளத்தில் உள்ள இரவு விடுதி ஒன்று மூடப்பட்டு பகலில் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையிலேயே குறித்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக இஸ்தான்புல் ஆளுநர் தாவுட் குல் தெரிவித்துள்ளார்.

தீ விபத்தில் பலியானவர்கள் ஒப்பந்தக்காரர்களா அல்லது இரவு விடுதியின் ஊழியர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றும் விசாரணைகள் தொடர்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# கடும் வெப்பநிலையால் மூடப்பட்ட நூற்றுக்கணக்கான பாடசாலைகள்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக நூற்றுக்கணக்கான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்நாட்டின் கல்வி அதிகாரிகள் இவ்விடயத்தினை தெரிவித்துள்ளனர்.

அதன்படி, தலைநகர் மணிலாவிலுள்ள நூற்றுக் கணக்கான பாடசாலைகளில் நேரடி வகுப்புகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் 35.7 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியது.



பிலிப்பைன்ஸின் பிரதான தீவான லுஸோன், தென் பகுதி தீவானா மின்டானோவா ஆகியவற்றில் பாடசாலைக ளில் நேரடி வகுப்புகள் இடை நிறுத்தப்பட்டுள்ளதோடு பாட சாலை நேரம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டின் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்துப் பரீட்சையின்றி சாரதி அனுமதிப் பத்திரம்

## போக்குவரத்து நிபுணர்த்துவ பதக்கம் பெற்றவர்களுக்கான புதிய திட்டம்

(கொழும்பு)

பாடசாலை போக்குவரத் பாதுகாப்பு அமைப்பினால் வாகன போக்குவரத்து குறித்த நிபுணத்துவ பதக்கம் வழங்கப்படும் உயர்தர மாணவர்கள், பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

பிரயோக ரீதியான பரீட்சைக்கு மட்டும் தோற்றி சித்தி எய்துவதன் மூலம் சாரதி அனுதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டியுள்ளார். பாடசாலை போக்குவரத்து பாதுகாப்பு அமைப்பு நிறுவுதல் மற்றும் பதக்கம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் ஆரம்பப் பிரிவு முதல் உயர்தர மாணவர்கள் வரையில் இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் வீதிப் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்ப குறித்து விழிப் புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த புதிய திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஜனாதிபதி நிதியத்தின் ஆதரவில் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகள்



(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தின் ஆதரவுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஐந்நூறு இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மனிதவளம் மற்றும் பாதுகாப்புத் துறை அதனை ஒருங்கிணைப்பைச் செய்து வருகிறது. அதற்கான செலவை ஜனாதிபதி நிதியம் ஏற்கிறது. இந்தப் பயிற்சியானது உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைகளை இலக்காகக் கொண்டது.

இலங்கை ஹோட்டல் பயிற்சிக் கல்லூரியின் பாடநெறிகளுக்கு இளைஞர்கள் வழிநடத்தப்படுகிறார்கள், குறிப்பாக ஹோட்டல்துறையில் வேலைவாய்ப்பைக் குறிக்கோளாகக் கொண்டு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மேலும், இளைஞர்கள் நேரடியாக வேலைகளுக்கு வழிவகுக்கும் தொழிற்பயிற்சி அதிகார சபையின் பாடநெறிகளுக்கு அனுப்பப்படுகின்றனர் என குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# மேலும் குறையும் கோழி இறைச்சியின் விலை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சியின் விலை மேலும் குறையும் என இலங்கை கால்நடை பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

அத்தோடு கோழி இறைச்சியின் விலை கணிசமாக குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, பண்டிகைக் காலங்களில் ஒரு கிலோ தோலில்லாத கோழி இறைச்சி 1,150 முதல் 1,250 ரூபாய் வரையிலும்,

ஒரு கிலோ தோலுடன் கூடிய குளிரூட்டப்படாத கோழி இறைச்சி 1,000 முதல் 1,050 ரூபாய் வரையிலும், தோலுடன் உறைந்த கோழி இறைச்சி 1,000 ரூபாய் மற்றும் 1,050 ரூபாய் வரையிலும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ சமைத்த கோழிக்கறி 950 முதல் 1,050 ரூபா வரையில் நுகர்வோர் கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இறைச்சி கையிருப்பு வைத்து சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம் என்றும், தாமதமின்றி கோழி இறைச்சியை விநியோகிக்குமாறும் அனைத்து இறைச்சி உற்பத்தியாளர்களுக்கும் தனது சங்கம் அறிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-5-6)

# இன்று ஒரு தகவல் 85



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நடப்பது நல்லது

ஓடி விளையாடு பாப்பா என்று தான் சொல்லுகின்றோம். ஓடி விளையாடு தாத்தா என்று சொல்வதில்லை!

ஏன்?தாத்தா ஓட ஆரம்பித்தால் தடுமாறி கீழே விழுந்துவிடுவார்! ஓடுகின்ற வயதிலே ஓட வேண்டும் நடக்கிற வயதிலே நடக்க வேண்டும்! நடக்கிறது என்றால் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள் அது ஒரு நல்ல பயிற்சி.

வயதானவர்கள் பல பேருக்கு பொதுவாக உள்ள பிரச்சினைகள் என்ன? சாயந்தர நேரம் சரியாக பொழுது போவதில்லை! மனைவி கூட பக்கத்திலே வந்து பேச்சுக் கொடுப்பதற்கு பயப்படுறாங்க! வயதானதினாலே உடற்பயிற்சியும் செய்ய முடியவில்லை! அதனாலே பேரப்பிள்ளைகளோடு கிரிக்கெட் விளையாடுவதும் கஷ்ரம்! உடம்பு எடையே கொஞ்சம் அதிகரித்த மாதிரி தெரிகிறது! இதற்கெல்லாம் பரிகாரம் என்ன தெரியுமா? பேசாம எழுந்து மெதுவாக 'வாக்கிங்' போக ஆரம்பித்து விட வேண்டியது தான்! நடப்பது எல்லாவற்றிக்கும் நல்லது! வயதானவர்கள் தான் நடக்க வேண்டுமென்பது இல்லை! பெண்கள், குழந்தைகள் எல்லோருக்கும் நல்லது! 'ரிட்டயர்' ஆனதுக்குப் பிறகு ரொம்ப ஆரோக்கியமாக இருக்கின்ற பல பேரைச் சந்தித்து ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்களாம் அமெரிக்காவிலே பல பேர் சொன்ன பதில் என்ன தெரியுமா? நாங்கள் தினமும் 4 கிலோ மீற்றருக்கு குறையாமல் நடக்கின்றோம். வாரத்திற்கு ஆறு நாள் அப்படி நடக்கின்றோம் என்று சொன்னார்களாம். அதுமட்டுமில்லை அவர்கள் எல்லோரும் அதிக நாட்கள் உயிர் வாழ முடிகின்றது. நாங்கள் நடக்கின்ற பொழுது நமது உடம்புக்குள்ளே என்ன நடக்கின்றது தெரியுமா? நாம் நடக்கும் போது தோல் தசை இவற்கெல்லாம் பிராணவாயு கிடைக்கின்றது. அதனாலே சக்தியை வெளியிடுகின்ற திறமை நமது உடலுக்கு அதிகமாகின்றது. இப்படி நடப்பதாலே இருதயநோய், மூச்சு நோய் சம்பந்தமான சிக்கல்கள் எல்லாம் ஏற்படமாமல் பாதுகாத்துக் கொள்கின்றது. சுவாசப்பை, இருதயம் இதற்கெல்லாம் சுலபமாக, நிதானமாக பயிற்சி கிடைக்கின்றது. வேகமாக நடக்கின்ற போது இரத்தக்குழாய்கள் விரிவடைகின்றது. இரத்த ஓட்டம் சுறுசுறுப்பாகின்றது. இருதயப் பகுதிக்கு இரத்தம் வசதியாகக் கிடைக்கின்றது.

சிகரெட் பிடிக்கின்றவர்கள் இரத்தத்திலே எல்லாம் கரியமிலவாயு, நிகோடின் இது மாதிரிய பல நச்சுப் பொருட்கள் கிடைக்கும். அதெல்லாம் சரி செய்வதற்கு நடப்பது நல்லது. இவ்வளவும் கேட்டதற்குப் பிறகு சரி நாமும் நடந்துதான் பார்ப்போம் என்று ஒரு முடிவுக்கு வந்துவிட்டீர்களா? அப்படி என்றால் சில ஆலோசனைகள்: நடக்க ஆரம்பிக்கின்றோம் என்று சொல்லி புறப்பட்டு திடீரென்று நாகர்கோவில் மட்டும் போய் வருகின்றேன் என்று கிளம்பி விடாதீர்கள். முதலில் ஒரு நாளைக்கு இரண்டு கிலோமீற்றர் என்று ஆரம்பியுங்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தி ஐந்து கிலோமீற்றர் வரைக்கும் போங்கள். அது போதும்.

எப்போதாவது சமயம் கிடைக்கின்ற போது நடப்போம் என்று நினைக்காதீர்கள். இதை தினசரி ஒரு பயிற்சியாக வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் ஒரு மணி நேரம் நடக்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.அதிகாலையிலே அரை மணிநேரம் சாயந்தரம் அரை மணி என்று பிரித்துக் கொள்ளலாம். முதலில் 15 நிமிடங்கள் நடப்பது பின்னர் படிப்படியாக அதைக் கூடுதலாக்கி ஒரு மணித்தியாலத்துக்கு கொண்டு வரலாம். இதை இரண்டு மாதங்களிலே செய்தால் போதும்.

சரி எவ்வளவு வேகத்தில் நடப்பது? உங்களுடைய சௌகரியத்தைப் பொறுத்து இதை நிர்ணயம் செய்யுங்கள். மணிக்கு மூன்றிலிருந்து ஐந்து கிலோமீற்றர் வேகம் வரைக்கும் நடக்கலாம்.

இருதயக் கோளாறுகள் உள்ளவர்கள், மூச்சுக் கோளாறுகள் உள்ளவர்கள் இதை ஆரம்பிப்பதற்கு முன்னர் வைத்தியரிடம் கலந்து பேசுவது நல்லது. சாப்பிட்ட உடனேயே குளிர் காற்றிலேயோ நல்ல வெய்யிலிலோ நடக்காதீர்கள். நடக்கும் போது கால் அசதியாக இருக்கின்றதா? மூச்சு இளைக்குறதா? பரவாயில்லை. கொஞ்சநேரம் உட்கார்ந்து ஓய்வெடுத்து விட்டு பிறகு நடக்கலாம். அதற்காக மல்லுக்கட்டிக் கொண்டு கையையும் காலையும் வீசிக்கொண்டு போகாதீர்கள். நடக்கும் போது நீங்கள் போட்டு இருக்கின்ற உடை காலணி இவையெல்லாம் இறுக்கமாக இருக்கக் கூடாது. தளர்ச்சியாக சுகமாக இருக்க வேண்டும்.கூடவே ஒரு நண்பர் அல்லது கணவர் இல்லையென்றால் மனைவி இவர்களும் நடந்தால் சிரமம் தெரியாமல் இருக்கும். சில பேருக்கு அதுவே ஒரு பெரிய சிரமமாக ஆகிவிடுவதுண்டு.

கருவுற்ற தாய்மார்கள் தினமும் இரண்டு கிலோமீற்றர் நடப்பது மிகவும் நல்லது. கோயில் பிரகாரத்தை சுற்றி வருகின்ற பழக்கம் எல்லாம் எதற்காக? சூடேறின கருங்கல் பாதத்திலே பட்டால் அது ஒத்தடம் கொடுக்கின்ற மாதிரி. வயதான பிறகு வேலையின் நெருக்கடியை குறைத்துக்கொள்ளலாமே தவிர அதற்காக ஒரே இடத்தில் உட்கார்ந்து விடக்கூடாது.

அறுபது வயதானால் இருதயம் செயற்படுகின்ற திறன் 1/5 குறைந்து விடுகின்றது. அதேசமயம் இரத்த அழுத்தம் 1/5 கூடி விடுகின்றது. அதனாலேயே இருதயத்திற்கு இரண்டு விதத்திலேயும் பாதிப்பு. இதைச் சரி செய்வதற்கு சிறந்த வழி நடப்பதுதான் என்று ஒருத்தர் சொன்னார். எனக்கு இருதய நோய் வராமல் இருப்பதற்குக் காரணமே என்னுடைய உயிர் சிநேகிதர் ஒருத்தர்தான் என்றார். எப்படி என்று கேட்டால் அதற்கு அவர் சொன்னார். அந்த நபரிடம் ஐந்து வருடத்திற்கு முன்பு 50ரூபாய் கடன் கொடுத்தேன். அதை வசூல் செய்வதற்கு இன்னமும் நடையாக நடந்து கொண்டிருக்கிறேன். என்றார். அதுவும் சரிதான். இவருக்கெல்லாம் வாக்கிங் என்று தனியாக ஒன்று தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கோரி பெற்றோர்கள் கவனயீர்ப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரக்கோரி குறித்த பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கபப்பட்டது.

குறித்த பாடசாலையில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகளைக் கொண்டு இயங்கி வரும் நிலையில் பாடசாலையில் தரம் 5 மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய தகுதியான ஆசிரியரின்மை மற்றும் பாடசாலையினுடைய அடிப்படை வசதிகளின்மை என்பவற்றை நிவர்த்தி செய்து தரக் கோரியும் பாடசாலைக்கு தகுதி வாய்ந்த அதிபர் ஒருவரை நியமித்து தருமாறும் கோரியும் குறித்த பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று பாடசாலை முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு துணுக்காய் வலயக்கல்வி திணைக்கள அதிகாரிகள் பெற்றோர்களுடன் கலந்துரையாடி அதிகாரிகள் வழங்கிய உறுதி மொழியை அடுத்து குறித்த போராட்டம் கைவிடப்பட்ட நிலையில் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-315)

# உலக கடற்புற்கள் தினம் கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு



(தருமபுரம்)

உலக கடற்புற்கள் தினம் கடல்சார் சுற்றுச்சூழலில் கடற்புல் மற்றும் அதன் முக்கிய செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்தவகையில், கிளிநொச்சியில் உலக கடற்புற்கள் தினம் நேற்று முன்தினம் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தினைச் சேர்ந்த 75 சுற்றாடல் முன்னோடி கழக மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கடற்புற்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு, நாச்சிக்குடா கடலுக்கு மாணவர்கள் அழைத்து செல்லப்பட்டு குறித்த விடயங்கள் செய்முறையாக காண்பிக்கப்பட்டன. (நி-5-33-316)

# கிளிநொச்சியில் மாணவர்களிற்காக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் மாணவர்களின் தேவை அறிந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த பாடசாலையில் சுமார் 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். சுத்தமான குடிநீர் பெறுவதில் மிகவும் சிரமத்தை எதிர்கொண்டு வந்தநிலையில், இராணுவத்தினரின் ஏற்பாட்டில் குடிநீர் விநியோகத் திட்டம் இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதே வேளையில் இப்பகுதியில் வாழும் மக்களுக்கான குடிநீர் விநியோகமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட உயர் இராணுவ அதிகாரிகள், கரைச்சி பிரதேச செயலாளர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கிராம சேவையாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-33-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3080

### பிரணவி




### கபில்




### தரன்




### லத்தீஸ்




### தட்ஷா




### பல்லவி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 446





"சேநாதிபதியும், பார்த்திபேந்திரனும் சேர்ந்து என் பிரயாணத்தை தடை செய்வதற்குச் சூழ்ச்சி செய்தார்கள்! சேநாதிபதி நாம் வரும் வழியில் பல இடையூறுகளை உண்டு பண்ணினார். நமக்கு முன் அவசரமாக ஆள் அனுப்பிக் கிராமவாசிகளை உபசாரம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார். பார்த்திபேந்திரர் விரைந்து திரிகோணமலைக்குப் போயிருக்கிறார். அங்கிருந்து கப்பல் ஏறி நமக்கு முன்னால் தொண்டைமானாற்றின் முகத்துவாரத்துக்கு வந்து விட வேண்டுமென்பது அவருடைய உத்தேசம். ஆகா! அவர்களுடைய சூழ்ச்சி எனக்குத் தெரியாது என்று நினைத்தார்கள்! உன் உதவியினால் அவர்களுடைய சூழ்ச்சியைத் தோற்கடித்தேன்"

பூங்குழலிக்குச் சட்டென்று தான் செய்த காரியம் என்னவென்பது நினைவு வந்தது. அவளை நரகலோகத்தில் யமதூதர்கள் உயிரோடு செக்கிலே போட்டு ஆட்டுவது போலிருந்தது.

"ஐயா! அவர்கள் எல்லாரும் தங்களை எதிரிகளிடம் சிறைப்படாமல் தப்புவிக்க முயன்றார்கள். நான் பாவி! தங்களைச் சிறைப்படுத்த அழைத்துப் போகிறேன்!" என்று கூறிவிட்டு விம்மினாள் பூங்குழலி.

"அடேடே! இது என்ன? உன்னைப்பற்றி நான் எவ்வளவோ நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தேன். நீயும் அவர்களைப் போல் ஆகிவிட்டாயே?"

"என் சுய புத்தியினால் இந்தப் பாதகத்தை நான் செய்யவில்லை. தங்களுடைய ஆசை வார்த்தையில் மயங்கிப் பைத்தியமாகி விட்டேன். இப்போது புத்தி தெளிந்தது. நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு பூங்குழலி குதித்து எழுந்தாள். அவள் ஓடிப் போகாமல் தடுப்பதற்கு இளவரசர் அவளுடைய கரத்தை இலேசாகத் தொட்டுப் பற்றினார்.

அச்சமயத்தில் தேவலோகத்துக் கன்னிகைகளுக்கு வேறு வேலை இருக்கவில்லை. அவர்கள் வெண்ணிலவின் சாற்றை சந்தனக் குழம்புடன் கலந்து பூங்குழலியின் மீது தெளித்தார்கள். அவள் முற்றும் சக்தி இழந்து, செயலிழந்து மீண்டும் கீழே உட்கார்ந்தாள். இரண்டு கரங்களிலும் முகத்தை மூடிக் கொண்டு விம்மத் தொடங்கினாள்.

"சமுத்திர குமாரி! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல எண்ணினேன். நீ இப்படி அழுவதாயிருந்தால் சொல்வதற்கில்லை. உடனே புறப்பட வேண்டியதுதான்."

பூங்குழலி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"அதுதான் சரி, கேள்! இவர்கள் எல்லாரும் என்னைச் சிறைப்படாமல் காப்பாற்ற முயல்கிறார்கள் என்று சொன்னாயே? அது உண்மைதான். அது எதற்காகத் தெரியுமா?"

"தங்கள் பேரில் அவர்கள் வைத்திருக்கும் அன்பினால் தான். நான் ஒருத்தி மட்டுந்தான் பாதகி!"

"பொறு, பொறு! என்பேரில் எல்லாருக்கும் அன்பு தான்! எதற்காகத் தெரியுமா? யாரோ சோதிடர்களும் ரேகை சாஸ்திரிகளும் சொல்லியிருக்கிறார்களாம். நான் ஒரு காலத்தில் சக்கரவர்த்தி ஆகப் போகிறேன் என்று. ஆகையால் ஒவ்வொருவரும் என்னைச் சிம்மாசனத்திலே தூக்கி வைத்து என் தலையிலே ஒரு கிரீடத்தையும் சுமத்திவிடப் பார்க்கிறார்கள். பேராசை பிடித்தவர்கள்!"

"ஐயா! அவர்கள் அப்படி ஆசைப்பட்டால் அதில் தவறு என்ன? இந்த லோகத்துக்கு மட்டுந்தானா, மூன்று உலகத்துக்கும் சக்கரவர்த்தியாகத் தாங்கள் தகுதி வாய்ந்தவர் அல்லவா?"

"ஆகா! நீயும் அவர்களைப் போலத்தான் பேசுகிறாய்! பெண்ணே! இவ்வுலகில் அரண்மனையைப் போன்ற சிறைக்கூடம் வேறில்லை சிம்மாசனத்தைப் போன்ற பலிபீடமும் இல்லை கிரீடம் அணிவது போன்ற தண்டனை வேறு கிடையவே கிடையாது. இதையெல்லாம் மற்றவர்களிடம் சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் நீயாவது ஒப்புக் கொள்வாய் என்று நினைத்தேன்." பூங்குழலியின் கண்ணிமைகள், பட்டுப் பூச்சியின் சிறகுகளைப் போல் அடித்துக் கொண்டன.

(தொடரும்...)

---




# சிறுவர் அரங்கம்

## திருந்திய திருடன்!

(நேற்றைய தொடர்ச்சி...)

பல அழகான பெண்கள் அவனைச் சூழ்ந்து நின்றனர். மயக்கம் தெளிந்த ராசப்பா தான் இருந்த இனிய சூழலைப் பார்த்து வியப்பு அடைந்தான். "நான் எங்கே இருக்கிறேன்?" என்று அந்தப் பெண்களைக் கேட்டான்.



அவர்களில் ஒருத்தி, "நீங்கள் இப்பொழுது தேவலோகத்தில் இருக்கிறீர்கள். இங்கே நீங்கள் என்ன நினைத்தாலும் உடனே நிறைவேறும். நீங்கள் எங்களைப் போல மகிழ்ச்சியாக இருக்கலாம். நாங்கள் தேவலோக பெண்கள். இங்கே யாரும் பொய் சொல்லக் கூடாது. பொய் சொன்னால் உடனே இந்த உலகத்தை விட்டுப் போய் விடுவர். நீங்கள் யார்? பூவுலகில் என்னென்ன செய்[illegible]கள்? சொல்லுங்கள்," என்று இனிமையாகக் கேட்டாள்.

உடனே ராசப்பா அந்தப் பெண்களைப் பார்த்தான். அவர்கள் கால்கள் தரையில் இருப்பதையும் [illegible] தான். மகாவீரர் சொன்னதைக் கேட்டு அவன் நினைவுக்கு வந்தது. "இவர்கள் தேவர்கள் அல்லர் மனிதப் பெண்கள் தான். என்னை ஏமாற்ற முயற்சி செய்கின்றனர்" என்ற உண்மை அவனுக்குப் புரிந்தது.

"ஆ! மகாவீரர் பேசியதைச் சிறிது நேரம் கேட்டதாலேயே இவர்கள் என்னை ஏமாற்றுவதைக் கண்டுபிடிக்க முடிந்ததே அவர் பேசுவதை நான் முழுமையாகக் கேட்டிருந்தால் எத்தனை நன்மைகள் உண்டாகி இருக்கும்" என்று நினைத்து உள்ளம் கலங்கினான். அவர்களைப் பார்த்து, "நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள். இது சொர்க்கம் அல்ல நீங்களும் தேவர் உலகப் பெண்கள் அல்ல. எனக்கு மட்டும் விடுதலை கிடைத்தால் நான் திருட்டுத் தொழிலையே செய்யமாட்டேன். மகாவீரரின் சீடனாகி அவர் அருளுரைகளை எப்பொழுதும் கேட்டுக் கொண்டு அவர் திருவடிகளில் விழுந்து கிடப்பேன்," என்று உணர்ச்சியுடன் சொன்னான்.

இவனது பேச்சு அரசனின் காதுகளில் விழுந்தது. ராசப்பாவை அழைத்து விசாரித்தான் அரசன். நடந்த நிகழ்ச்சிகளை அறிந்த அரசன் அவனை விடுதலை செய்தான். அவனும் திருட்டுத் தொழிலை விட்டு விட்டு மகாவீரரின் சீடர்களில் ஒருவன் ஆனான்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் புதைந்து கிடக்கும் நல்லவைகளை உணரும்போதே பிறரோடும் நல்லவைகளை பகிர்ந்து கொள்ள முடியும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சுட்டெரிக்கிறது வெயில் சுருண்டு போகின்றனர் மாணவர்

எனது பாடசாலை, எனது அதிபர், எனது ஆசிரியர் என மாணவர்கள் தங்கள் இதயங்களில் கொலுவிருத்திப் போற்றுவதென்பது சாதாரணமானவிடயமன்று.

அவ்வாறு மாணவர்கள் தங்கள் இதயங்களில் தாம் கற்ற பாடசாலையை, தமது அதிபரை, ஆசிரியர்களை ஏற்றிப் போற்றுகின்றனராயின், அதற்குள் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும் மனிதநேயமும் மாணவர்களைத் தங்கள் பிள்ளைகள் போல நடத்துகின்ற அன்பும் அரவணைப்பும் வியாபித்துள்ளதென்பது புரிதற்குரியது.

ஆம், முதுமை வந்துற்றபோதும், தன்னைப் படிப்பித்த ஆசிரியரை நினைந்து மனமுருகுகின்றவர்கள் பலர் உளர்.

எனவே மாணவர்கள் தங்கள் அதிபர், ஆசிரியர்களை தங்கள் வாழ்நாள் முழுவதும் போற்றுகின்றனரெனில், அத்தகைய அதிபர், ஆசிரியர்கள் தெய்வங்களுக்குச் சமமானவர்கள்.

அதேநேரம் சில அதிபர், ஆசிரியர்களை மாணவர்கள் அடியோடு வெறுக்கின்றனர் எனில், அதற்கு அந்த அதிபர், ஆசிரியர்களின் சிறுமைத்தனமும் குறுகிய மனப்பாங்குமே காரணமெனலாம்.

இஃது ஒருபுறமிருக்க, இப்போது வெயில் சுட்டெரிக்கிறது. என்ன செய்வது என்று புரியாதவாறு மனம் பேதலிக்குமளவில் வெயில் கொடுமை தாங்கமுடியவில்லை.

அதிலும் எங்கள் மாணவர்களின் பாடு சொல்லிமாளா. பாடசாலை வகுப்பறைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் நிறைந்திருக்கும் மாணவர்களின் நிலைமையை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். ஒரு காற்றாடி (Fan) கூட இல்லாத வகுப்பறைகள், தகரங்களாலும் சீமெந்து சீற்றுகளாலும் ஆன கூரைகளைக் கொண்ட தனியார் வகுப்புக்களில் நெருக்கமாக குந்தியிருக்கும் மாணவர்கள். கடவுளே! என்ன செய்ய முடியும்.

ஆக, அன்புக்குரிய அதிபர்களே!, ஆசிரியப் பெருந்தகைகளே! தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களே! எங்கள் பிள்ளைகள் சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்தில் இருந்து ஓரளவேனும் விடுபட, வகுப்பறைகள் தோறும் காற்றாடி வசதிகளைச் செய்து கொடுங்கள்.

கூரைகளின் வெப்பத்திலிருந்து மாணவர்களைப் பாதுகாக்க உரிய ஏற்பாடுகளைச் செய்து தாருங்கள்.

தேவைப்படுமிடத்து பெற்றோர்களிடம் உதவி கேளுங்கள். நிச்சயம் அவர்கள் உதவுவார்கள். இதைவிடுத்து வகுப்பறைகளுக்கு காற்றாடி பூட்டினால் மின்கட்டணம் அதிகரிக்குமே என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். ஏனெனில் நீங்கள் பெற்ற பிள்ளைகளாயின் மின் கட்டணம் பற்றிச் சிந்திப்பீர்களா என்ன?

ஆகையால்உடனடியாக வகுப்பறைகளுக்கு காற்றாடி வசதிகளைச் செய்து கொடுங்கள். கூரையின் வெப்பத்தை கீழிறங்காமல் தடுக்கும் ஏற்பாட்டைக் கவனியுங்கள். இவற்றை நீங்கள் செய்யும்போது, மாணவர்கள் உங்களை தங்கள் வாழ்நாள் முழுவதும் மறக்காமல் ஏற்றிப் போற்றுவர். இது சத்தியம்.

# நச்சுத்தன்மையான போதைப்பொருட்களை பயன்படுத்தும் இலங்கையர்கள்

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் நச்சுத்தன்மை வாய்ந்த போதைப்பொருட்களை பயன்படுத்துவதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.**

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஷக்ய நாணயக்கார இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பல்வேறு வகையான போதைப்பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.

இது தவிர, புதிய வகையான போதை மாத்திரைகளும் சமூகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர் இவ்வாறான போதை மாத்திரைகளை பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில், இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் 25 வகையான இரசாயனப் பொருட்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏனென்றால் அவற்றினால் புதிய வகையான போதை மாத்திரைகளை தயாரிக்க முடியும்.

எனவே இந்த இரசாயனப் பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதற்கு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி அவசியம் என அவர் தெரிவித்தார்.(நி-5-6)

## வவுனிக்குள வாய்க்கால்களை தூர்வாரும் விவசாயிகள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் வாய்க்கால்களை துப்பரவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

வவுனிக்குளத்தின் கீழ் நடைபெறும் பயிர்ச் செய்கைக் கூட்டங்களில் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக வாய்க்கால்களை துப்பரவு செய்து தாருங்கள் என அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக விவசாயிகள் கோரிக்கை விடுத்த போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாமல் இருந்ததன் காரணமாக சிறுபோக நெற்செய்கை காலங்களில் நீர்ப்பாசன முயற்சிகள் பெரும் இடர்களுக்கு மத்தியிலேயே நடைபெற்றன.

இந்நிலையில் வவுனிக்குளம் விவசாயிகள் தமது முயற்சியினால் வவுனிக்குளத்தின் வலது கரை, இடதுகரை பிரதான வாய்க்கால்கள், அணைக்கட்டு வீதிகள் கனரக வாகனங்கள், உழவு இயந்திரங்கள் என்பன பயன்படுத்தப்பட்டு விவசாயிகள் ஒன்றாக திரண்டு குளத்தின் வாய்க்கால்களையும் வீதிகளையும் புனரமைத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முக்கிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக வவுனிக்குளம் விளங்குகின்றது. இக்குளத்தின் மூலம் மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் விவசாயிகள் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-350)

## உலகின் மிக வயதான நபர் காலமானார்

(வெனிசுலா)

உலகின் மிக வயதான மனிதராக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த ஜுவான் வின்சென்ட் பெரெஸ் மோரா காலமானார்.

குறித்த விடயத்தை வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ தனது எக்ஸ் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில், உலகிலேயே மிகவும் வயதான மனிதரான இந்த நபர் நேற்று முன்தினம் இரவு மரணமடைந்ததாக தெரியவந்துள்ளது.

ஜுவான் வின்சென்ட் பெரெஸ் மோரா உலகின் வயதான மனிதராக கின்னஸ் உலக சாதனையில் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 திகதி இடம்பிடித்துள்ளார். அதன் போது அவருக்கு வயது 112 வயது 253 நாட்கள் என கூறப்படுகிறது.

11 பிள்ளைகளின் தந்தையான இவர் கின்னஸ் சாதனையில் இடம்பிடித்த போது அவருக்கு 41 பேரக்குழந்தைகளும் 30 கொள்ளு பேரக்குழந்தைகளும் இருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5-6)

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்தி நகர், மகாதேவ ஆச்சிரமத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

சகல அங்கத்தவர்கள் மற்றும் சிவனடியார்களையும் கலந்துகொள்ளுமாறு அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.(நி-5-6)

# மாணவர்களை இலக்கு வைத்து யாழில் போதைப்பொருள் விற்பனை

## 6 நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட ஆறுபேரை நேற்று புதன் கிழமை யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் மற்றும் நாவாந்துறை பகுதியை சேர்ந்த 18 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.புறநகர் பகுதியில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலைக்கு அருகில் வைத்து போதைப்பொருள் வியாபாரத்தில் கும்பல் ஒன்று ஈடுபட்டு வருவதாக பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் குழுவினர், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இருவரை மடக்கி பிடித்தது.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூவரை கைது செய்து ஐவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நாவாந்துறை பகுதியில் முச்சக்கர வண்டியில் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்ய முற்பட்ட வேளை முச்சக்கர வண்டியுடன் தப்பியோடியவரை பொலிஸார் துரத்திய போது, முச்சக்கர வண்டியை, நாவாந்துறை சந்தை பகுதியில் கைவிட்டு தப்பிச் செல்ல முற்பட்ட வேளை பொலிஸார் அந்நபரை கைது செய்ததுடன் முச்சக்கர வண்டியை சோதனையிட்ட போது அதனுள் இருந்து 300 போதை மாத்திரைகளை பொலிஸார் மீட்டனர்.

அதனை அடுத்து சந்தேகநபரை கைது செய்த பொலிஸார், முச்சக்கர வண்டியையும் மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்று சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி


## கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


38



ஆனாலும், தேர்தலில் வெற்றி பெற்று தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த ஒப்பந்தத்துக்கு இசைவான ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு டட்லிசேனநாயகாவின் அமைச்சரவையிலிருந்த பல அமைச்சர்கள் இடம் கொடுக்கவில்லை.

இலங்கையில் புரையோடி இருந்த தமிழ் மொழிப்பிரச்சினைக்கு இந்தியாவின் உதவியுடன் தீர்வு காணப்பட்டது. இதுபற்றி ஆதம் வாவாசர்ஜூன் அவர்கள் சர்வதேச ஆராய்ச்சி இதழுக்கு எழுதிய தனது ஆய்வுக்கட்டுரையில் சில விடயங்களை பின்வருமாறு கூறியுள்ளார்.

**இலங்கையில் தமிழ்மொழி உட்பட தமிழர் பிரச்சினைக்கு இந்திய அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள்**

1970 இல் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினதும் அவ்வாறே 1977 இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினதும் தமிழ்-பேசும் சிறுபான்மையினருக்கு எதிரான கொள்கைகள், திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் காரணமாக 1970 களின் இறுதிப் பகுதியிலிருந்து சிங்கள-தமிழ் இன முரண்பாட்டின் வன்முறைசார்ந்த நடவடிக்கைகள் உக்கிர நிலையை அடைந்திருந்தன.

1981 முதல் 1983 வரையான கால கட்டத்தில் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்திலும், தமிழர்கள் செறிவாக வாழ்ந்த மற்றைய பகுதிகளிலும் தமிழர்கள் மீதான தாக்குதல்களும் அடக்குமுறையும் தீவிரமடைந்திருந்தன. உத்தியோக பூர்வ மற்ற கணிப்பீடுகளின்படி, கிட்டத்தட்ட 2000 தமிழர்கள் 1983 ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்டதாக கணிக்கப்பட்டது.

இலங்கையில் நடந்தேறிய தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையும் வன்முறையும் இந்திய மாநிலமான தமிழ் நாட்டில் பெரும் அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. 1983 ஜூலைக்கலவரத்தை அடுத்து பல் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறியினர். 1986 களங்கும் போது சுமார் 100,000 இற்கும் அதிகமான தமிழர்கள் தென்னிந்தியாவில் (தமிழ் நாட்டில்) இடம் பெயர்ந்திருந்தனர்.

இதனால், இலங்கைத் தமிழர்களின் தேசியப் போராட்டத்துக்கு தமிழ்நாட்டுத்தலைவர்களின் ஆதரவு கிடைத்ததுடன் அத்தலைவர்கள் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு தமது அழுத்தத்தையும் கொடுக்கத் தொடங்கினர். இதனையடுத்து,இந்திய அரசாங்கம் இலங்கையின் முரண்பாட்டுச் சூழலில் நுழைந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் மீது மேலாதிக்கத்தைத் திணிக்கவும் முயன்றது.

இந்தியாவின் அழுத்தமான தலையீட்டினை அடுத்து இந்திய அரசாங்கத்தின் தலைமையில் 1983 களிலிருந்து இலங்கையின் சிங்கள-தமிழ் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக நடந்தேறிய பல சுற்றுப்பேச்சு வார்த்தைகளில் தமிழ் மொழிக்கான அரச அந்தஸ்து உட்பட தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் அரசியல்-நிர்வாக அதிகாரங்களுடன் கூடிய பிராந்திய சபையைத் தாபித்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கிய கோரிக்கைகளை தமிழ்க் கட்சிகளின் முன்வைத்த போதும் அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அவற்றைப் பரிசீலிப்பதற்குத்தயாராக இருக்கவில்லை.

இதனால், இந்திய அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வியடைந்தன. அத்துடன், இலங்கை அரசாங்கம் தமிழர்களின் தேசியவாத விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு இராணுவ யுத்திகளைக் கையாளத் தொடங்கியது. இலங்கை அரசாங்கமானது தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்குப் பிராந்தியத்தில் பொருளாதாரத் தடையை விதித்தமையானது இலங்கையின் ஆள்புலப் பிரதேசத்தில் இந்தியா அத்துமீறி நுழைவதற்கும் இலங்கை மீது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கும் வழி விட்டது.

இறுதியில் இந்திய அரசாங்கத்தின் தீர்வு யோசனைகளுக்கு இலங்கை அரசாங்கம் உடன்பட வேண்டி ஏற்பட்டது. பல சுற்றுக்களில் நடந்தேறிய பேச்சு வார்த்தைகளின் இறுதியில் 1987 ஜூலை 29 இல் இந்திய-இலங்கை உடன்படிக்கை அடையப் பெற்றது. இலங்கையின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் தமிழ்-மொழி மாநிலம் ஒன்று உருவாக இவ்வுடன் படிக்கை வழி விடுவதாக அப்போது எதிர்வு கூறப்பட்டது.

**மாகாணசபைகள் ஏற்பாடும் தமிழ் மொழி அங்கீகாரமும்**

இந்திய-இலங்கை உடன்படிக்கையானது சிங்கள-தமிழ் இனமுரண்பாட்டினைத்தீர்ப்பதற்காக தமிழ்-மொழி பேசுவோர் செறிவாக வாழ்ந்துவரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைத்த வகையில் அரசியல்-நிர்வாக அதிகாரங்கள் பகிரப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பை உள்ளடக்கிய தீர்வுத் திட்டத்தை அறிமுகம் செய்தது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் ஊடாகவும் அவ்வாறே 16 ஆவது திருத்தத்தின் ஊடாகவும் தமிழ் மொழிக்கு சிங்களத்தைப் போன்று அரச கரும மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதனூடாக, தமிழும் சிங்களத்தைப் போன்று நாடு முழுவதற்குமான நிர்வாக மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் முதன்மை அரச கரும மொழியாக தமிழ் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் தேசியஅளவிலும் தமிழ்தேசிய மொழியாகவும் அரச கருமமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சிங்களமும் தமிழும் அரச கருமமொழி என்ற அந்தஸ்தைப் பெற்றமையால் சகல அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளும் சிங்களத்திலும் தமிழிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.இதன் பெறுபேறாக பாராளுமன்றம், மாகாணசபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர் ஒருவர் இரு தேசிய மொழிகளில் ஏதாவது ஒருமொழியில் உரையாற்றுவதற்கு உரித்துடையவர் ஆவார். ஒரு நபர் இரு மொழிகளில் தாம் விரும்பிய மொழியில் கல்விகற்க முடியும். எனினும் வேறு மொழியில் கற்பித்தல் இடம்பெறும் பாடசாலைக்கு இச்சட்டம் செல்லுபடியாகாது. உதாரணம் : சர்வதேசப் பாடசாலைகள்.

அரச கருமமொழி, நிர்வாகமொழி ஆகிய இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் யாது என்பதைப்பார்ப்போமானால் அரச நிறுவனங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அறிக்கைகளைப் பதிவு செய்வதற்குமான மொழி நிர்வாக மொழியாகும்.

சிங்களம் அல்லது தமிழ் அல்லாத வேறு ஒருமொழி (ஆங்கிலம்) நிர்வாக மொழியாக அமையக்கூடும். ஆனால், அது இது வரை நிச்சயிக்கப்படவில்லை. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழி தமிழ் மொழியாகும். அதே சமயம் ஏனைய மாகாணங்களின் நிர்வாக மொழி சிங்கள மொழியாகும்.

நிர்வாக மொழிகளாகக் குறிப்பிட்ட பிரதேசத்தில் இரு அரச கருமமொழிகளையும் பிரகடனப்படுத்த முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்களத்திலும் தமிழிலும் நிர்வாகம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்கமைய 29 பிரதேச செயலகப்பிரிவுகள் இரு மொழிபிர தேச செயலகப் பிரிவுகளாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

அவையாவன: பதுளை, பண்டாரவளை, எல்ல, ஹல்தும்முல்லை, ஹாலி எல, ஹபுத்தளை, லுனுகல, மீகஹ கியுல, பஸ்ஸர, சொரணாதொட்டை, வெலிமட, கொழும்பு, திம்பிரிகஸ்யாய, களுத்துறை, பேருவலை,(கண்டி) அக்குரனை, தெல்தொட்டை, பன்வில, பஸ் பாகே, கோரலே உடபாத்த, (நுவரெலிய) அம்பகமுவ, ஹங்குரன்கெத்த, கொத்மலை, நுவரெலிய, வலப்பனை, (புத்தளம்) கற்பிட்டி, முந்தல், புத்தளம், வனாதவில்லுவ, (காலி) காலி பட்டினமும் சூழலும் ஆகும்.

இவ்வாறாக இரு மொழிபிரதேசச் செயலகங்களாக பிரகடனப்படுத்தப் பட்டிருந்தாலும், தொடர்ந்தும் மொழி தொடர்பான பாகுபாடுகள் நிலவுகின்றன. வசதிகள் போதியளவு இன்மையாலும், அரச அதிகாரிகளின் வேண்டா மனப்பாங்குகள் காரணமாகவும் இந் நிலைமை நிலவுகிறது.

எனினும், நிர்வாகமொழி பற்றிய இச் சட்டத்துக்கு அமைய தமிழ்மொழி அல்லது ஆங்கில மொழி ஆகியவற்றுள் ஒரு மொழி மூலம் கடிதப் போக்குவரத்துச் செய்தல். உத்தியோக பூர்வ ஆவணத்தை, அறிக்கையொன்றை அல்லது ஆவணத்தைப் பரிசீலனை செய்தல், பொழிப்பைப்பெறுதல், அதன்மொழி பெயர்ப்பை தமிழ் மொழி மூலம் அல்லது ஆங்கிலமொழி மூலம் பெற்றுக் கொள்ளுதல், ஒருபடிவத்தை எழுதிகையொப்பமிடும் போது குறிப்பிட்ட ஆவணம் அல்லது அதன்தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பைப் பெறுதல் போன்றவற்றிக்கு மக்களுக்கு உரிமை உண்டு.

இவ்வாறு உரிமைகளிருந்தும் நடைமுறையில் இவற்றிற்கு போதிய வசதிகள் இன்மையால் ஏட்டுச்சுரைக் காயாகவே உள்ளன. இதனால், இலங்கையில் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் மொழி உரிமைகளை அனுபவிப்பது உட்பட பல்வேறு பிரச்சினைகளை தொடர்ந்தும் எதிர்நோக்கிக் கொண்டே உள்ளனர்.

இரண்டாயிரம் ஆண்டு மரபுடையது நம் தமிழ் மொழி. இந்த மரபு உலகத்தில் வெகு சில மொழிகளுக்கு மட்டும் தான் உண்டு. கிரேக்க மொழிக்கு இந்த சிறப்பு உண்டு. ஆனால் தொன்மையான கிரேக்க மொழியின் இலக்கியத்தை இன்றைக்கு அவர்களால் எளிதாக கற்றுக் கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ முடியாது.

நமக்கோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியமான திருக்குறளை பள்ளியில் கற்றுத் தருகின்றனர்.திருக்குறளில் உள்ள சொற்கள் பல, நம்முடைய இன்றைய வாழும் மொழியில் இருக்கின்றது. இந்த அளவிற்கு தொடர்ச்சியான மரபுடைய மொழிகள் உலகத்தில் இல்லவே இல்லை என்று சொல்லலாம்.

சீன மொழியான மாண்டரின், அரபு மொழி என தொன்மையான மொழிகள் எதனை எடுத்துக் கொண்டாலும் அதனுடைய தொடர்ச்சி அறுந்து போயிருக்கின்றது. வடமொழியினை எடுத்துக் கொண்டால் அது வாழும் மொழியாக இல்லை. எபிரேய மொழியினை புதுப்பித்துக் கொண்டு இருக்கின்றார்கள். அதன் தொன்மையை மீண்டும் கொண்டு வர முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

நடுவில் அது தன் மரபுத் தொடர்ச்சியினை இழந்து இருந்தது. ஆனால் தமிழில் அறுபடாத தொடர்ச்சி இருக்கின்றது. குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், இடையில் குறைந்தது 500 - 600 ஆண்டுகள் நாம் அயலார் ஆதிக்கத்தில்தான் வாழ்ந்து இருக்கின்றோம். அப்படி இருந்தபோதிலும், நம்முடைய மொழி எந்த விதமான அரசின் துணையும் இல்லாமல் மக்களால் மட்டுமே தொடர்ச்சியாக உயிர்ப்புத் தன்மையுடன் கொண்டுவரப்பட்டுள்ளது.

திருக்குறளோ, சங்க இலக்கியங்களோ எதுவாயினும் ஒவ்வொரு தலைமுறையும், அடுத்த தலைமுறைக்கு இந்த இலக்கியங்களை கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற விழிப்புணர்வோடு செயற்பட்டு இருக்கின்றனர்.

அப்படிப்பட்ட மரபை, நாம் ஒரு தலைமுறையில் தொலைத்து விடலாம். ஆனால் நாம் புதியதாக கற்றுக் கொள்ளும் மொழி நம்முடைய தாய்மொழியாக மாறப்போவதில்லை. எப்பொழுதும் குடியேற்ற மொழிகள் அயல் மொழிகளாகத்தான் இருக்கும்.

தமிழ் நவீன காலத்திற்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்கின்றது. தற்கால தொழில் நுட்பங்கள் வளரத் தொடங்கிய காலத்தில், தொழில் நுட்பத்திற்கு ஏற்றவாறு வடிவமைத்து தமிழை புழங்கத் தொடங்கியவர்கள் தமிழர்கள்.

100 க்கும் குறைவான மொழிகள் தான் தொழில் நுட்பத்தில் பயன்படுத்தப்படுகின்றன. உலக மயமாக்கலால் தாய் மொழிகள் வேகமாக அருகி வருகின்றன.

மனிதர்கள் தங்களது பாரம்பரிய அறிவினையும், பண்பாட்டினையினையும் நிலைநிறுத்திக் கொள்ள தங்களது தாய்மொழியினைக் காத்துக் கொள்வது அவசியம்.

தமிழ் மொழியின் சிறப்பு பற்றி கூற வேண்டுமெனில் ஈழத்து தமிழறிஞர் கா.சிவத்தம்பி, "தமிழின் சிறப்பு அதன் தொன்மையில் இல்லை. அதன் தொடர்ச்சியில் இருக்கிறது." என்பார். ஆகவே, தமிழ் மொழியின் மேன்மை அதன் தொன்மையிலும், தொடர்ச்சியிலும் இருக்கின்றது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு வாரங்…

நாட்கள் மட்டுமே கூடியிருந்த நிலையில், இரண்டு வாரங்களுக்கும் மேலாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## ஜே.வி.பி…

திற்கு தயாராக உள்ளதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்கவுடன் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான பகிரங்க விவாதத்திற்கு வருமாறு சஜித் பிரேமதாஸவுக்கு அக்கட்சியின் உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி நேற்று முன்தினம் அழைப்பு விடுத்திருந்தார்.

அதற்குப் பதில் அளிக்கும் வகையிலேயே சஜித் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த சஜித் பிரேமதாஸ,

பொருளாதாரம், சமூகம், அரசியல் மற்றும் சர்வதேசம் உள்ளிட்ட எந்தவொரு தலைப்பிலும் விவாதத்திற்கு நான் தயாராக உள்ளேன் எனவும் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார மற்றும் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார கொள்கைகள் தொடர்பில் சவால் விடுத்திருந்த நிலையில், சுனில் ஹந்துநெத்தி விவாதத்திற்கான அழைப்பை விடுத்தார்.

தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதி வேட்பாளர்கள் பொருளாதாரக் கொள்கைகள் குறித்து பகிரங்கமாக விவாதிப்பதன் ஊடாக மக்கள், கட்சிகளின் பொருளாதார கொள்கைகள் தொடர்பில் அறிந்துக்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டிய சுனில், சஜித் பிரேமதாஸவுடன் விவாதத்திற்கு அநுர குமார திஸாநாயக்க தயார் எனவும் தெரிவித்திருந்தார்.

விவாதத்திற்கான அழைப்பினை சஜித் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், அதனை எழுத்து மூலம் அறிவிக்குமாறும் சுனில் ஹந்துநெத்தி கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## ஒரே நாளில்…

பெற்ற செய்தியாளர் சந்திப்பில் புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவதற்கு சட்டத்தில் எவ்வித தடையும் இல்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், "முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே ரணில் விக்கிரமசிங்கவின் தேவையாக உள்ளது. ஆனால் இது ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைக்கின்றது.

முதலில் பொதுத் தேர்தலை நடத்துவதே பசில் ராஜபக்ஷவின் விருப்பமாக உள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நாளில் நடாத்துவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது" என தெரிவித்துள்ளார். (ம-7,10)

## இரண்டு…

பெற்ற முதலீட்டுச் சபையின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தெற்காசியப் பிராந்தியத்தில் விசேட பொருளாதார வலயங்களை நிறுவுவதில் இலங்கையே முன்னோடியாகும்.

கட்டுநாயக்க மற்றும் பியகம போன்ற முதலீட்டு வலயங்களுக்கு பிரதான முதலீட்டாளர்களை ஈர்ப்பதிலும், தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதிலும் வெற்றியடைந்துள்ளது.

முதலீட்டுச் சபை நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டு 45 வருடங்களாகின்றன.

ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு பியகமவில் இருந்து முதலீட்டு வலயத்தை உருவாக்குவது சாத்தியமற்றது எனக் கூறி வெளியேறியது.

ஆனால், பியகமவில் முதலீட்டு வலயத்தை உருவாக்க முடியும் என அன்றிலிருந்த முதலீட்டு சபையிலுள்ள பொறியியலாளர்கள் குறிப்பிட்டனர்.

மேலும் அவர்கள் பியகம முதலீட்டு வலயத்தை உருவாக்கினர். இந்த நாட்டில் முதலீட்டு வலயங்களின் ஆரம்பம் அப்படித்தான் நடந்தது.

இந்த இரண்டு முதலீட்டு வலயங்களிலும் புலிகளின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

மேலும் ஜே.வி.பியின் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்றார். (ம-7,10)

## வட மாகாணத்…

வடக்கின் வெப்பநிலை 41 பாகை செல்சியஸ் அளவுக்கு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் அதிகளவு நீரை அருந்துவதோடு வெயில் உச்சமான நேரத்தில் பிரயாணங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார தரப்பு அறிவித்துள்ளது. (ம-7,10)

## முரு…

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 33 ஆண்டுகள் வரை சிறையிலிருந்து கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முருகன், ரொபேர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் நேற்று காலை இலங்கை வந்தடைந்தனர்

திருச்சி சிறப்பு முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 11.15 மணிக்கு சென்னைக்கு பொலிஸ் வாகனம்மூலம் அழைத்து வரப்பட்டனர்.

இதன்படி நேற்று முற்பகல் 10 மணியளவில் சென்னை விமான நிலையத்திலிருந்து அவர்கள் இலங்கை நோக்கி பயணித்தனர். மூவரும் காலை 11.30 மணிக்கு [illegible] விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களுக்கு இலங்கைக்கு செல்வதற்கு மாத்திரமே இந்தியாவிலுள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகரகம் கடவுச்சீட்டு வழங்கியிருந்தது.

குறித்த மூவரிடம் சட்டவிரோதமாக கடவுச்சீட்டின்றி இந்தியா சென்றமை குறித்து புலனாய்வுப் பிரிவினர் கடும் விசாரணையை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த மூவரையும் அழைத்துச் செல்ல கஜேந்திரன் எம்.பி, சட்டத்தரணி சுகாஷ், வேலன் சுவாமிகள், முருகனின் தாயார் ஆகியோர் விமான நிலையம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2024.04.03 — சீட்டிழுப்பு இலக்கம் 5439 — W 8 6 3 4 2 5

அத சம்பத — W 3 4 2 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0014

தன நிதானய — திகதி - 2024.04.03 — சீட்டிழுப்பு இலக்கம் - 1469 — M 07 19 40 52 M — 41556

மெகா பவர் — திகதி 03/04/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1787 — X 20 16 50 64 68 — 72070

லக்கி 7 VIP — திகதி 2024.04.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0265 — T 9 9 6 1 8 8 T

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3681 — சீட்டிழுப்பு திகதி 03.04.2024 — Y 20 39 53 67 — Y — 50146

HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2024.04.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0748 — கடகம் 12 43 56 57 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 03.04.2024 — வெற்றி வாரம் 147 — பச்சை — K 6 3 3 0 5 6 — 66717 — M — அடுத்த சுப்பர் ஜக்பொட் 20,000,000.00 — தொலை பேசி: 011-2 333 546-47 — Web : www.dlb.lk

SUPER BALL — 2413 — சிவப்பு — 03.04.2024 — புதன்கிழமை — 33 37 42 73 D — 28434 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,935,742.40

சனிதா — 2024.04.03 — வெற்றி வாரம் 4574 — வெள்ளை — 01 28 49 67 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,121,023.20 — 51432

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4125 — பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.04.03 — புதன்கிழமை — 01 06 32 58 கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.16,420,592.80 — 608713

கப்ருக — E 30 11 36 43 68 — 1589 — 978275 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 515,752,381.40 — 2024.04.03 புதன்கிழமை

ஜயோதா — 2024.04.03 — வெற்றி வாரம் 2014 — மஞ்சள் — 19 23 27 37 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,834,864.40 — 98910

அத கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம் : 2239 — சீட்டிழுப்பு திகதி : 2024.04.03 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.104,088,248.80 — 04 39 73 75 E — 626616

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் களமிறங்குவார்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவார் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஹட்டனில் நடைபெற்ற ரமழான் நோன்புப் துறக்கும் இப்தார் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையின் பன்முகத்தன்மையை பலமாக மாற்ற வேண்டும். பல்வேறு மதங்களையும் கலாச்சாரங்களையும் மதித்து வாழ வேண்டும் என்று நாங்கள் எப்போதும் கூறி வருகிறோம்.

செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதுடன், ஜனாதிபதித் தேர்தலுக்கு அனைவரும் தயாராகி வருகின்றனர்.

பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை மீண்டு வருகிறது. அதை புரிந்து கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய தலைவர் ஒருவரே மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும்.

நாடு வீழ்ந்தால் நாட்டின் அனைத்து இனங்களும் வீழ்ச்சியடையும், நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்து இனங்களும் ஒன்றிணைய வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார். மேலும் பல வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள். நாடு வீழ்ச்சியடைந்த போது நாட்டை வழிநடத்தியது யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினையாகவே கச்சதீவு விவகாரம் தற்போது பேசப்பட்டு வருகிறது. அதனை இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டமை குறித்து ஒருபோதும் விவாதிக்கப் படவில்லை.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் பேசி தீர்த்து வைக்கப்பட்ட விடயத்தை பற்றி தற்போது பேச தேவையில்லை என்றார்.

(ம-7.10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (341)

076 825 7716 (ஆகாஸ்)

வேலையாட்கள் தேவை

கொழும்பில் உள்ள நிறுவனத்தில் Computer இல் வேலை செய்வதற்கு O/L வரை படித்துள்ள பெண்கள் தேவை.
சாப்பாடு, தங்குமிடம் போன்றவை உண்டு.
தொடர்புகளுக்கு :
077 539 3728 (353)

பதவி வெற்றிடங்கள்




● Cashier - காசாளர்
● Waiter - உணவு பரிமாறுபவர்
● Cleaner - துப்பரவுப் பணியாளர்
முழு நேரம் / பகுதி நேரம்
ஆண் / பெண் (349)
இல.483, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு : 077 077 3138

கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து (C-0900)
V2 GUEST 0743900360 0743900361

வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு: (318)
074 17 37 684

CANADA VISA

UK யின் பிரபல சட்டத்தரணியின் அனுசரணையுடன் செய்து கொடுக்கப்படும்.
021 222 5686
076 424 7111 (293)
Expo Net Overseas Consultants
345, Kasthurlyar Road, Jaffna.

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0900)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம். (351)
தொடர்புகளுக்கு :
076 206 1703

வீடு விற்பனை

சுன்னாகம் கிழக்கு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வீடு விற்பனைக்குள்ளது.
Whatsapp
416 303 5706
SRILANKA
076 934 7728 (324)


நன்றி தெரிவிக்கின்றோம்

14.02.2024 அன்று இணுவில் பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தை அறிந்து சம்பவ இடத்திற்கு உடனடியாக விஜயம் செய்த



கௌரவ
கடற்தொழில் அமைச்சர்
டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் உடனடி தீர்வாகவும் நிரந்தர தீர்வாகவும் ஒளி சமிக்ஞை அமைத்து தந்து உதவியதற்கு பொதுமக்கள் ஆகிய நாங்கள் நன்றியைத் தெரிவிப்பதோடு அவரது சேவை தொடர எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- இப்படிக்கு -
இணுவில் வாழ் பொதுமக்கள் (C-900)


யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
28.03.2023 முதல் சித்திரைப்புத்தாண்டு வரை
ஆடைகளின் சாம்ராஜ்யம்
இந்தியன் செலக்ஷனின்
சித்திரைப் புத்தாண்டு
ஆடைக் கொண்டாட்டம்



திருமணப்பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், சேட், ரீ சேட், பாட்டி புறொக், லெஹங்கா மற்றும் ஏராளமான ஆடைத் தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே முந்திக்கொள்ளுங்கள்

விசேட விலைக் கழிவு
ரெடிமேற் கொட்டன் சல்வார்
ரெடிமேற் நெற் சல்வார்
500/=
28.03.2024 முதல்
சித்திரைப் புத்தாண்டு வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்) (350)
இந்தியன் செலக்ஷன்
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, [illegible] வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.